
விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 217 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 07 செவ்வாய்க்கிழமை (23.07.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




# ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர்



## தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள், சிவில் சமூகத்துக்கிடையே ஒப்பந்தம் கைச்சாத்து

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கான உடன் படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளுக்கும் தமிழ் சிவில் சமூகத்துக்கும் இடையில் குறித்த உடன்படிக்கை நேற்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

(02ஆம் பக்கம் பார்க்க)

## அராலியில் இளைஞன் மீது வாள்வெட்டு

(அராலி)

வட்டுக்கோட்டை அராலியில் வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்ற இளம் குடும்பஸ்தர் மீது வாள்வெட்டுக் குழுவினர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவம் 11

## கரவெட்டியில் சுற்றிவளைப்பு
### 13 பேர் கைது

(கரணவாய்)

கரவெட்டி மேற்குப் பகுதியில் நெல்லியடிப் பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் விசேட அதிரடிப் படையினர் இணைந்து யுக்திய நடவடிக்கையினை 11

## ஜனாதிபதித் தேர்தலில் போட்டி; பெரமுனவுடன் ரணில் கலந்துரையாடல்
### நாமலைப் பிரதமராக்குமாறு நிபந்தனை

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் முக்கியத்துவம் வாய்ந்த பேச்சுவார்த்தை கொழும்பில் நடைபெற்றுள்ளது.

தொடர்ந்து இடம்பெற உள்ள இந்தக் கலந்துரையாடல்களின் முடிவுகளை அடுத்த இரண்டு 11

## 22ஆவது திருத்தத்தை நீதிமன்றில் சவாலுக்குட்படுத்துவோம்
### உதய கம்மன்பில எம்.பி



(கொழும்பு)

22ஆவது திருத்தச் சட்டத்தை உயர் நீதி மன்றில் சவாலுக்குட்படுத்துவோம் என ஹெல உறுமய கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரி 02


## ஞானசார தேரர் பிணையில் விடுதலை
### வெளிநாட்டுப் பயணத்துக்குத் தடை

(கொழும்பு)

பொது பல சேனாவின் பொதுச் செயலாளர் வணக்கத்திற்குரிய கலகொட அத்தே ஞானசார தேரரைப் பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றம் அண்மை 11

## இணைந்து பயணிக்க சஜித், அநுரவுக்கு ஜனாதிபதி ரணில் அழைப்பு



(கம்பஹா)

அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்கு ஏற்ப நாட்டின் எதிர்காலத்தை வடிவமைக்க தாம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை எனவும், நாட்டின் நிகழ்ச்சி நிரலுக்கு அமையவே அரசியலை உருவாக்க வேண்டும் எனவும் வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, அநுர குமார திஸாநாயக்க ஆகியோரை இப் 11




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறையில் மோதல் மூவர் வைத்தியசாலையில்

பருத்தித்துறையில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் இருவர் கத்தி வெட்டிற்கு உள்ளானதுடன் ஒருவர் தாக்கப்பட்ட நிலையிலும் பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை இரண்டாம் குறுக்குத்தெருப் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை(21) இரவு 9.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் அதே பகுதியைச் சேர்ந்த இராஜதுரை ரஞ்சன் (வயது- 51) மற்றும் கமலேஸ்வரன் விமல் (வயது- 21) ஆகிய இருவர் கத்தி வெட்டு காயங்களுக்கு இலக்கான நிலையிலும் ஓடக்கரை பருத்தித்துறையைச் சேர்ந்த சற்குணம் ஶ்ரீதரன் (வயது- 50) என்பவர் கம்பியினால் தாக்கப்பட்ட நிலையிலும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பில் பருத்தித்துறைப் பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

(ம-7,60)

## எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில்

# ஜப்பான் வெளிவிவகார அமைச்சருடன் ஜே.வி.பி தலைவர் அநுர கலந்துரையாடல்

*(கொழும்பு)*

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஜப்பான் வெளிவிவகார அமைச்சருடன் ஜே.வி.பி தலைவர் அநுரகுமார திசாநாயக்க கலந்துரையாடியுள்ளார்.



ஜப்பானுக்கு விஜயம் செய்துள்ள தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவுக்கும் ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் TSUGE Yoshifumiக்கும் இடையிலான சந்திப்பு நேற்று ஜப்பான் வெளிவிவகார அமைச்சின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இலங்கையில் பொருளாதார மற்றும் அரசியல் நிலைமைகள் குறித்தும் இரு நாடுகளுக்கு இடையில் நீண்ட காலமாக இருந்து வருகிற நட்புறவு தொடர்பாகவும் இராஜதந்திர மற்றும் பொருளாதார உறவுகளின் அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகவும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றன. (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

## ஜனாதிபதித்...

யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் குறித்த நிகழ்வு நேற்று இடம்பெற்றுள்ளது.

கடந்த காலங்களில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில் தமிழ் மக்கள் எவருக்கு வாக்களித்தும் எந்தவித பயனும் இல்லை என தமிழ்க் கட்சிகளும் சிவில் சமூகத்தினரும் பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளனர்.

இதனால் தமிழ் மக்களின் நிலைமையையும் தமிழ் மக்களின் பிரச்சனைகள் தேவைகளை வெளிப்படுத்தும் வகையில் எதிர்வரும் ஐனாதிபதி தேர்தலில் எந்தவொரு சிங்கள வேட்பாளருக்கும் ஆதரவை வழங்காது தமிழர் தரப்பில் இருந்து பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் அண்மைக் காலமாக சிவில் சமூகத்தினராலும் அரசியல் கட்சிகளாலும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவந்தது.

இந்நிலையில் இரு தரப்பினர்களுக்கு இடையிலும் பல்வேறு விடயங்களை உள்ளடக்கி ஒப்பந்தம் கைச்சாத்தாகியதைத் தொடர்ந்து பொது வேட்பாளர் தெரிவு உள்ளிட்ட ஏனைய அனைத்து விடயங்கள் தொடர்பிலும் அடுத்தகட்ட நடவடிக்கைகள் மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த உடன்படிக்கையில், பாராளுமன்ற உறுப்பினர்களான சி.வி விக்னேஸ்வரன், செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பொ. ஐங்கரநேசன், சட்டத்தரணி ந.ஶ்ரீகாந்தா உள்ளிட்ட அரசியல்வாதிகளும், அரசறிவியல்துறை பேராசிரியர் கே.ரி கணேசலிங்கம், யதீந்திரா உள்ளிட்ட சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் கையொப்பம் இட்டனர். (ம-33)

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமிகோயில் (புதுக்கோவில்) கொக்குவில்

ஆலயம் தொடர்பான பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் என 13.07.2024 ஆம் திகதி வலம்புரி தினசரி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரமானது குறித்த ஆலயத்தில் 30.11.1962 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட யாப்பின் 13.3 உபபந்தியின்படி சட்டத்திற்கு புறம்பானதாகும். குறித்த யாப்பின் 7ஆம் பந்தியின்படி பொதுக்கூட்டம் நடைபெறவேண்டிய ஏற்பாடு காணப்படுகின்றது என்பதுடன் பந்தி 13.3 பிரகாரம் பொதுக்கூட்டம், விசேடகூட்டம், நிர்வாகசபைக்கூட்டம் என்பவற்றை கூட்டும் அதிகாரம் கடமை செயலாளருக்கே வழங்கப்பட்டுள்ளது என்றும் தற்பொழுதும் குறித்த ஆலயத்தின் செயலாளராக நடராசா ஶ்ரீறஞ்சன் அவர்கள்தான் இருந்து வருவதால் எதுவித அதிகாரமும் இல்லாத பொதுச்சபை உறுப்பினர்கள் என சிலரால் வெளிப்படுத்தி வெளியிட்ட விளம்பரம் சட்டத்திற்குப்புறம்பானதும் வலுவற்றதுமாகும் என்பதை குறித்த ஆலயப்பொதுச்சபை உறுப்பினர்களுக்கும் அடியார்களுக்கும் அறியத் தருகின்றேன்.

ந.ஶ்ரீறஞ்சன்.
செயலாளர்,
கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்,
பரிபாலனசபை.
22.07.2024
(C-847)

## 22ஆவது திருத்...

வித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வஜன வாக்கெடுப்பு இல்லாமல் உத்தேச 22 ஆவது திருத்தத்தை எளிய பெரும்பான்மையுடன் நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது. சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டவுடன் அதனை உயர் நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்துவோம். ஜனாதிபதியின் தந்திரத்தை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.ஆகவே எதனையும் அலட்சியப்படுத்தமுடியாது.

அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும் என்று நாட்டு மக்கள் எதிர்பார்த்துள்ள நிலையில் மக்களை குழப்பத்துக்குள் தள்ளும் வகையில் அரசியலமைப்பின் 22 ஆவது திருத்தம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தம் உருவாக்கப்படும் போது அதன் 83(ஆ) உறுப்புரையை திருத்தம் செய்ய மறந்துவிட்டோம்.ஆகவே மன்னித்து விடுங்கள் என்று குறிப்பிட்டுக் கொண்டு 22 ஆவது திருத்தத்தை ஜனாதிபதி கொண்டு வந்துள்ளார். 22 ஆவது திருத்தம் பற்றி ஜனாதிபதி குறிப்பிடுவது முற்றிலும் பொய்யானது. ஜனாதிபதியின் பதவிக் காலம் தொடர்பில் அரசியலமைப்பின் 30(2) உறுப்புரை திருத்தப்பட்டு, 06 வருட பதவிக் காலம் ஐந்து வருடங்களாகக் குறைக்கப்பட்டது. ஆகவே 83(ஆ) உறுப்புரையில் ஆறு வருடங்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளதை திருத்தம் செய்தாலும், செய்யாவிடினும் எவ்வித பயனும் கிடைக்காது. அதனால் ஜனாதிபதித் தேர்தலுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது இதனை உயர் நீதிமன்றம் பலமுறை உறுதிப்படுத்தியுள்ளது என்றார். (ம-7)

லங்கா மஹால் (PVT) LTD
DHL உள்நாட்டு. வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719
WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
077 839 3974
(181)

வேலை ஆட்கள் தேவை
யாழ் நகரில் உள்ள பிடைவை விற்பனை நிலையத்துக்கு அனுபவம் உள்ள பழக விரும்பும் வேலை ஆட்கள் தேவை.மேலும்
1) சிட்டை எழுதுனர் 3) பொதி செய்பவர்
2) வரவேற்பாளர் 4) காசாளர்
உடன் தேவை. இரு பாலாரும் விரும்பத்தக்கது.
தொடர்பு:- 021 222 9286
077 473 0895
(1533)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்பான்மை கிடைக்காவிட்டால் பாராளுமன்றம் கலைக்கப்படலாம்

## முன்னாள் அமைச்சர் சன்னஜயசுமன

**(கொழும்பு)**

**“22 ஆம் அரசியலமைப்புத் திருத்தம் பாராளுமன்றில் முன்வைக்கப்படும் பட்சத்தில் அதனை மூன்றில் இரண்டு பெரும்பான்மையினால் நிறைவேற்ற முடியாது போனால் ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைக்க நேரிடும்” என முன்னாள் அமைச்சர் சன்னஜயசுமன தெரிவித்துள்ளார்.**

நொச்சியாகம பிரதேசத்தில் நேற்று ஊடகங்களுக்கு கருத் துரைக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது “22 ஆம் திருத்தம் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டால் அதாவது மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்தால்.

அது தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் அறிவிப்பு வெளியிடப்படும்.

உயர்நீதிமன்றத்தின் பரிசீலனையின் பிரகாரம் ஜனாதிபதியின் பதவிக் காலத்தை 6 வருடங்களில் இருந்து 5 வருடங்களாக குறைப்பதற்கு மக்கள் கருத்துக்கணிப்பு கோரப்பட வேண்டும் என உயர்நீதிமன்றம் பரிந்துரை முன்வைத்தால் ஜனாதிபதி அதற்கு ஏதேனும் சூழ்ச்சிகளை மேற்கொள்வார்.

மறுபுறம் 22 ஆம் திருத்தத்தை பாராளுமன்றில் 3 இல் 2 பெரும்பான்மையினால் நிறைவேற்ற முடியாது போனால் ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கான சாத்தியம் உள்ளது.

தற்போதைய நிலையில் பாராளுமன்றம் கலைக்கப்படுவதை தற்போது அங்கம் வகிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் விரும்பமாட்டார்கள்” என சன்னஜயசுமன தெரிவித்துள்ளார். (நி-6)

## எலோன் மஸ்க் இலங்கைக்கு

(கொழும்பு)

உலகின் முதல் நிலை பணக்காரரான பிரபல அமெரிக்க வர்த்தகர் எலோன் மஸ்க் அடுத்த மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தனது Starlink செயற்கைக் கோள் அடிப்படையிலான இணைய சேவையை தொடங்குவதற்கே எலோன் மஸ்க் இலங்கை வரவுள்ளார்.

இந்த இணைய வசதிகளை இலங்கையில் வழங்குவதற்கு இலங்கை அரசாங்கம் ஏற்கனவே அனுமதி வழங்கியுள்ளது. தொலைத்தொடர்பு ஒழுங்கு முறை ஆணையமும் இதற்கு ஒப்புதல் அளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## திட்டமிட்டபடி தேர்தலை நடத்துமாறுகோரி ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலை திட்டமிட்டபடி நடத்துமாறு கோரி, பல சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் நேற்று இராஜ கிரியில் உள்ள தேர்தல் செயலக அலுவலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்

'பிரஜைகள் கூட்டணி' உறுப்பினர்களே இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்

இதில் சதிப்புரட்சிக்கு இடமளிக்கப்பட மாட்டாது, ஜனாதிபதித் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும், சுயாதீன தேர்தல்கள் ஆணைக் குழுவின் அதிகாரத்தை உடனடியாக பிரயோகிக்க வேண்டும் என்ற பதாதைகளை ஏந்தியவாறு இவர்கள் குறித்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## ஹிருணிகா பிணையில் விடுதலை



(கொழும்பு)

மூன்று வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவை பிணையில் விடுதலை செய்யுமாறு கொழும்பு மேல் நீதி மன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

அதன்படி கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல்ரணராஜா இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளார்.

2015 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 21 ஆம் திகதி தெமட்டகொட கடையொன்றில் பணிபுரிந்த அமில பிரியங்க என்ற இளைஞனை கறுப்பு டிஃபெண்டர் காரில் கடத்திச் சென்று சிறையில் அடைத்து தாக்கியமை உள்ளிட்ட 18 குற்றச்சாட்டுக்களில், குற்றவாளி என நிரூபிக்கப்பட்ட ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்கு மூன்று வருட கடூழியச் சிறைத்தண்டனை வழங்கப்பட்டிருந்தது.

அந்த தண்டனைகளுக்கு எதிராக ஹிருணிகா பிரேமச் சந்திர மேன்முறையீடு செய்துள்ள நிலையில், அவரை பிணையில் விடுவிக்குமாறு அவரது சட்டத்தரணிகள் முன்வைத்த பிணை கோரிக்கைக்கு அமைய இந்தத் தீர்ப்பு அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)


# பெறுகை அறிவித்தல்

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை

தலைவர் பெறுகைக் குழு பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை அவர்களினால் 16.08.2024ஆம் திகதி தொடக்கம் 15.02.2025ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் கீழ்வரும் சேவைகளை வழங்குவதற்கு தகைமையுள்ள சேவை வழங்குநரிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| பெறுகை இலக்கம் | சேவை | ஆளணி எண்ணிக்கை | பெறுகை பிணை வைப்பு(ரூபா) | |
|---|---|---|---|---|
| | | | தொகை | காலம் |
| NP/14/45(3)/1/OS/2024/02 | சுகாதாரச் சேவை | 06 | 18,000.00 | 22.10.2024 |

1. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கமைவாகவே இக்கேள்வி கோரப்படுகின்றது.
2. தனியார் சேவை வழங்குநர்கள் சேவை வழங்கலுக்கான வியாபாரப் பதிவுடைய ஒரு நபராகவோ அல்லது ஒரு நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 02 ஆண்டுகள் இச்சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.
3. சேவை வழங்குநர்களின் தலைமைக்காரியாலயம் அல்லது கிளைக் காரியாலயம் யாழ்ப்பாணம் அல்லது கிளிநொச்சி மாவட்டங்களில் அமைந்திருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் தலைவர், பெறுகைக்குழு பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை, தொலைபேசி இலக்கம் 024 324 3544 தொலைநகல் 021 205 0036 மின்னஞ்சல் pallaips@gmail.com இல் இருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் அலுவலக நாட்களில் 23.07.2024 தொடக்கம் 06.08.2024ஆம் திகதி மு.ப 09.00 முதல் 15.00 மணிவரை பெறுகை ஆவணங்களைப் பார்வையிடலாம்.
5. சேவை வழங்குநர்கள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை அலுவலகத்தில் அலுவலக நாட்களில் 23.07.2024 தொடக்கம் 06.08.2024ஆம் திகதி மு.ப 09.00 முதல் 15.00 மணிவரை மீளளிக்கப்படாத பெறுகைப் படிவக் கட்டணமாக ரூபா 2,000.00 (VAT,NBT நீங்கலாக)இனைச் செலுத்தி பெறுகை விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளமுடியும்.
6. கேள்வி ஆவணங்கள் 07.08.2024 ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தலைவர், பெறுகைக் குழு, பிரதேச சபை, பளை எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது அலுவலகத்தில் உள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும்.
7. பெறுகைப் பத்திரம் உள்ளடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பெறுகை இலக்கம் எழுதப்படல் வேண்டும்.
8. பெறுகைப்பத்திரங்கள் அனைத்தும் பெறுகை நேரமுடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்.
9. கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள்பெறுகைக் கோரலை கோருவதற்கும் பெறுகைக்குழுத் தலைவருக்கு அதிகாரம் உள்ளது.
10. கேள்வி கோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 29.07.2024 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்தச் செலவில் கலந்துகொள்ளமுடியும்.

**திருமதி.தர்சினி தயானந்தன்,தலைவர்,**
**பெறுகைக்குழு, பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.**

**23.07.2024** (சி-842)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்காவது தடவையாக மகுடம் சூடிய ஜப்னாகிங்ஸ்




**லங்கா பிரீமியர் லீக் கிரிக்கெட் தொடரில் 4 ஆவது முறையாக ஜப்னாகிங்ஸ் அணி சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது.**

ஜப்னா கிங்ஸ் மற்றும் காலி டைட்டன்ஸ் அணிகளுக்கிடையில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிப்பெற்ற ஜப்னா அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தது.

இதனையடுத்து முதலில் துடுப்பெடுத்தாடிய காலி அணி 20 ஓவர்களுக்கு 6 விக்கெட்டு களை இழந்து 184 ஓட்டங்களைப் பெற்றது. ஜப்னா அணி சார்பில் சிறப்பாக பந்துவீசிய அசித பெர்னாண்டோ 35 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 4 விக் கெட்டுக்களை வீழ்த்தினார்

இந்த நிலையில், 185 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கி துடுப்பெடுத்தா டிய ஜப்னா கிங்ஸ் அணி, 15.4 ஓவர்கள் முடிவில் இலக்கை சுலபமாக அடைந்தது.

ஜப்னா அணி சார்பில் அதிரடியாக விளையாடிய ரைலி ரூசோவ் 53 பந்துகளை எதிர்கொண்டு 106 ஓட்டங்களையும் குஷல் மெண்டிஸ் 40 பந்துகளில் 72 ஓட்டங்களையும் பெற்றார்.

இதுவரை நடந்த 5 எல்பிஎல் தொடர்களில் 4ஆவது முறையாக ஜப்னா அணி வெற்றிவாகை சூடியுள் ளது குறிப்பிடத்தக்கது. (நி-6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3176

Search for people, places and things

சரன்





தமிழ்




தர்சிகன்




கார்த்திகா




சூரியா





பிரித்தா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 41 ஆண்டுகளின் பின்னும்
# தமிழர்களின் மனங்களில் ஆறாத ரணங்களாய்!



ஒரு மனிதன் உணர்ச்சி மரத்துப் போய் நிர்வாணமான நிலையில் தலையில் கை வைத்து அமர்ந்திருக்க, சுற்றிலும் இளைஞர்கள் மகிழ்ச்சியுடன் ஆர்ப்பரிக்கும் புகைப்படத்தை காணாதவர்கள் இருக்க முடியாது.

ஜூலை கலவரத்தின் சாட்சியாக உலகத்தின் மனசாட்சியை உலுக்கிய புகைப்படம் அது. அந்தக் கலவரத்தில் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழர்களை, சிங்கள இனவெறியர்கள் கண்ட துண்டமாக வெட்டி வீசினார்கள். குடும்பத்துடன் தமிழர்களை உயிரோடு தீயிட்டுக் கொளுத்தினார்கள். வணிக வளாகங்கள், கடைகள், எரிபொருள் நிலையங்கள், திரையரங்குகள் என 5000 இற்கும் மேற்பட்ட தமிழர்களின் வர்த்தக நிறுவனங்களை குறிவைத்து காட்டுமிராண்டித்தனமாக சூறையாடினார்கள்.

தமிழர்களின் பொருளாதார அடித்தளத்தை அழிக்க வேண்டும் என்ற நோக்கத்துடனே நன்கு திட்டமிடப்பட்டு இந்தக் கலவரம் நடந்தது. ஆறு நாட்கள் சிங்கள வெறியர்களின் கையில் கொழும்பு மாநகரமும் தென்னிலங்கையும் இருந்தது.

தலைநகரமெங்கும் தமிழர்களின் மரண ஓலங்களும், தீயடங்காது எரியும் தமிழர் களின் வணிக நிலையங்களும் என கொழும்பு கோரமாய்க் காட்சியளித்தது. 1,50,000 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் தங்கள் உடைமைகள் இழந்து அகதிகளாக்கப்பட்டனர்.

காலங்கள் கடந்தாலும் தமிழர்களுக்கு நிகழ்த்தப்பட்ட அநீதிகள் நம் இரத்தத்தை உறைய வைப்பவை. நடத்தப்பட்ட படுகொலைகள் நம் உணர்ச்சிகளை கொந்தளிக்கச் செய்பவை.

ஈழத் தமிழர்களின் வரலாற்றை வாசிப்பவர்கள் கண்ணீரின்றி கடக்க முடியாத நிகழ்வுகளுள் ஒன்று இந்த கருப்பு ஜூலை எனப்படும் ஜூலை கலவரம். 1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் சிங்களப் பேரினவாத அரசாலும் சிங்கள இன வெறியர்களாலும் தமிழர்களுக்கு நடத்தப்பட்ட கொடூரங்களே "கறுப்பு ஜூலை" என்று குறிப்பிடக் காரணமாக இருக்கிறது.

"கறுப்பு ஜூலை" நிகழ்வு காலங்கள் கடந்தாலும் தமிழர்களின் மனதில் ஆறாத காயங்களையும் தீராத வலிகளையும் தமிழர்கள் மனதில் கிளறிக் கொண்டேயிருக்கும்.

**கறுப்பு ஜூலை**



---

## இராசிபலன்

23.07.2024
ஆடி 7 , செவ்வாய்க்கிழமை
துதியை பிற்பகல் 1.17 மணிவரை

அவிட்டம் முன்னிரவு 11.52 மணிவரை
சுபநேரம் - 10.32-12.02 மணிவரை
இராகுகாலம் - 3.02-4.32 மணிவரை

சந்திராஷ்டமம்.
மிருகசீரிடம், திருவாதிரை

**வளவன்**



**மேஷம்** பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.



**ரிஷபம்** சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும், வாய்ப்புகள் உங்களைத் தேடி வரலாம், செய் தொழில் மேன்னையுண்டு, தூர தேசத்துச் செய்திகள் மகிழ்ச்சி தரும்.



**மிதுனம்** அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், விட்டுப்போன தொடர்புகள் மீண்டும் கிடைக்கும் வாய்ப்புண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.



**கடகம்** நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை உருவாகும், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.



**சிம்மம்** உறவினர்களின் சந்திப்பால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், பயணங்கள் கைகூடும், போசன சுகமுண்டு.



**கன்னி** இனத்தார் பகை மாறி இன்பங்கள் கூடும்; நாள், செய்தொழில் மேன்மையுண்டு, கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.



**துலாம்** நிதி நிலை உயர்ந்து நிம்மதி கிடைக்கும், கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், வளர்ச்சி கூடும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.



**விருச்சிகம்** நண்பர்கள் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும், பணத்தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முற்படுவீர்கள், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள்.



**தனுசு** உறவினர்களின் ஒத்துழைப்பால் பகைப் பிரிவினைகள் சுமுகமாக அமையும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.



**மகரம்** பிரியமான சிலரின் சந்திப்பு இடம் பெறலாம், குடும்பத்தில சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், பணப்புளக்கம் அதிகரிக்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.



**கும்பம்** சான்றோர்களின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள், விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், போசன சுகமுண்டு.



**மீனம்** உறவினர்களின் அன்புத் தொல்லைக்கு ஆட்பட நேரிடலாம், எப்படி நடக்குமோ வென நினைத்த காரியம் நல்ல விதமாக அமையலாம், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.

**உடல் நலம் இல்லாதபோது வாழ்க்கை வெறுமையாக உள்ளது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழைகளுக்கு நாட்டில் நீதியே இல்லையா?




## மன்னாரில் விவசாயிகள் கவனயீர்ப்பு

(மன்னார்)

**மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இலுப்பைகடவை மற்றும் அந்தோனியார்புரம் பகுதியை சேர்ந்த ஏழை விவசாயிகள் தங்களுக்கான காணி உரிமையைக்கோரி நேற்று மன்னார் மாவட்ட செயலகத்திற்கு முன்பாக அடையாள கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.**

மாந்தை மேற்கு பகுதியில் உள்ள சோழ மண்டலம் குளத்தின் கீழ் 30 வருடங்களுக்கு மேலாக அரசாங்க அனுமதியுடன் விவசாய செய்கையில் ஈடுபட்டிருந்த அந்தோனியார்புரத்தை சேர்ந்த மக்களுக்கு நபருக்கு தலா இரண்டு ஏக்கர் காணி வீதம் வழங்குவதாகவும் அதன் ஊடாக வாழ்வாதார செயற்பாடுகளை முன்னெடுக்க உதவுவதாகவும் அரசாங்கத்தினால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தாங்கள் பூர்வீகமாக பயன்படுத்திய காணியை தங்களுக்கு வழங்காது வெளிநாட்டை சேர்ந்த நபர்களிடமும் பணம் படைத்தவர்களிடம் பணம் பெற்று கொண்டு காணி சீர்திருந்த ஆணைக்குழுவினர் அவர்களுக்கு வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்து பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் வி.எஸ். சிவகரன் தலைமையில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தில் இந்த நாட்டில் ஏழைகளுக்கு நீதியே இல்லையா,அரச அதிகாரிகளே காணி மாபியாக்களின் கூட்டாளிகளா, அரச அதிகாரிகளே துரோகத்திற்கு துணைபோகாதீர்கள்,தமிழ் அரசியல்வாதிகளே ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கின்றீர்களா போன்ற பல்வேறு வாசகங்களை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின் இறுதியில் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரிடம் கையளித்திருந்தனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு குறித்த காணி விடயம் தொடர்பில் மாவட்ட செயலகம் சார்பாக அறிக்கை ஒன்று சமர்பிக்க உள்ளதாகவும் மேலும் குறித்த போராட்டம் தொடர்பிலான ஆவணங்களையும் அறிக்கையுடன் சமர்பித்து விரைவில் குறித்த பிரச்சினை தொடர்பில் தீர்கமான ஒரு முடிவை பெற்று தருவதாகவும் மாவட்ட அரச அதிபர் தெரிவித்தார். (நி-6-285)

---


## முல்லைமாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம்

**பதவி வெற்றிடங்கள்**

மேற்படி சமாசத்தில் கீழ்வரும் பதவிகளுக்கு தகுதியுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து வெளிவாரியான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. பதவி- களஞ்சிய முகாமையாளர்
**சம்பள குறி இல - 208/13**
**சம்பள அளவுத்திட்டம்:- 18360-16 × 10-170 X 10-21660**

**தகைமைகள்**

அ) கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./ கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

**அல்லது**

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த. சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/ தமிழ் உட்பட 3 திறமைச்சித்தியுடன் கணிதம் உட்பட 6 பாடங்களுடனான சித்தி.

02. பதவி :-கிராமிய வங்கி முகாமையாளர்
**சம்பள குறி.இல :-205/13**
**சம்பள அளவுத்திட்டம் - 18360-16×10-170×10-21660**

**தகைமைகள்**

அ) கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் கிராமியவங்கிப் பிரிவு பதவியொன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம். / கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்டத்தில் கிராமிய வங்கிப் பிரிவு பதவியொன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

**அல்லது**

ஆ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி/ க.பொ.த. உயர்தரப் பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தி.

**ஏனைய விபரங்கள்,**

- மேற்படி பதவிகளுக்கான விண்ணப்ப படிவங்களை சுயமாக தயாரித்து கடித உறையின் இடது பக்க மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினைக் குறிப்பிட்டு தலைவர், முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், மாங்குளம் வீதி, முல்லைத்தீவு எனும்முகவரிக்கு 06.08.2024 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைத்தல் வேண்டும்.
- வயதெல்லை 18-45 வயது வரை(தற்போது கூட்டுறவுத்துறையில் உள்ளவர்கள் சங்கத்தினூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.)
- நியமனத்திற்கென தெரிவு செய்யப்படும் போது சங்கத்தால் கோரப்படும் ரொக்கப்பிணையை செலுத்துதல் வேண்டும்.
- இப் பதவிக்குரிய அடிப்படை சம்பளத்தை விட 01/2022 இன் படி ரூபா 5000.00ம், வடமாகாணஊழியர் தொழிற்சங்க கோரிக்கைக்கு அமைவாக ரூபா 5000.00ம், 04/2024 இன் படி ரூபா 5000.00ம், இலாபம் ஏற்படும் போது வாழ்க்கை செலவுப்படி ரூபா7800.00 ம் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் சுற்றுநிருபத்திற்கு அமைய இதர படிகளும், காலத்திற்கு காலம் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்படும் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
- முல்லைத்தீவு மாவட்டத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(நி-843)

**தலைவர்,**
**முல்லைமாவட்ட க.தொ.கூ.ச.சமாசம்,முல்லைத்தீவு.**


---

## உணவுத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்கு பிரதேச செயலக சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவினரால் நடத்தப்படும் உணவுத் திருவிழா நாளை புதன்கிழமை மருதனார் மடத்தில் (இராமநாதன் கல்லூரி முன் நடைபாதை) காலை 9 மணி முதல் 3 மணி வரை நடைபெறவுள்ளது. (நி-6)

---


## பொது அறிவித்தல்
### வலிகாமம் வடக்கு பிரதேச சபை
### காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)

**கீரிமலையில் ஆடி அமாவாசை தினத்திற்கான (04.08.2024) தற்காலிக வியாபார நிலையங்கள் அமைப்பதற்கான இடங்களை ஏலத்தில் வழங்கல் மற்றும் பிதிர்கடன் கிரியைகள் மேற்கொள்ளும் சிவாச்சாரியார்களை பதிவு செய்தல்**

1. **தற்காலிக வியாபார நிலையங்கள் அமைப்பதற்கான இடங்களை ஏலத்தில் வழங்கல்**

கீரிமலையில் ஆடி அமாவாசை தினத்திற்கான உற்சவகால தற்காலிக வியாபார நிலையங்கள் அமைப்பதற்கான இடங்களை ஏலத்தில் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. பகிரங்க ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் எதிர்வரும் 30.07.2024 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக தெல்லிப்பளை உப அலுவலகத்தில் ரூபா200.00 கட்டணம் செலுத்தி விண்ணப்பப் படிவத்தை பெற்றுக்கொள்ளலாம். பகிரங்க ஏலம் 01.08.2024 ஆம் திகதியன்று (வியாழக்கிழமை) முற்பகல் 9.30 மணிக்கு கீரிமலை பெருந்து நிலைய முன்றலில் நடைபெறும்.

**குறிப்பு:**

- சித்திபெற்ற கேள்விதாரர்கள் உடனடியாகவே அதற்கான குத்தகைப்பணம் முழுவதையும் செலுத்துவதுடன் வியாபார உரிமத்தினையும் பெற்றுக் கொள்ளவேண்டும்.
- ஆலய சுற்றாடலில் உள்ள நிரந்தரக் கடைகளும், உற்சவ காலத்துக்குப் பிரதேச சபையால் வழங்கப்படும் கடைகளும் தவிர வேறு கடைகள் தனியார் காணிகளிலோ அல்லது தனிப்பட்ட இடங்களிலோ சபையின் அனுமதியின்றி வியாபாரம் மேற்கொள்ள முடியாது.
- உணவு கையாளும் நிலையங்கள் சுகாதார வைத்திய அதிகாரியினால் வழங்கப்படும் அனுமதியினைப் பெற்றுக்கொண்ட பின்னரே வியாபாரம் மேற்கொள்ள அனுமதிக்கப்படும்.

2. **பிதிர்கடன் கிரியைகள் மேற்கொள்ளும் சிவாச்சாரியார்கள் பதிவு செய்தல்**

பிதிர்க்கடன் கிரியைகள் மேற்கொள்ளும் சிவாச்சாரியார்கள் 01.08.2024 தொடக்கம் 02.08.2024 வரையான காலப்பகுதியில் வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தெல்லிப்பளை உப அலுவலகத்தில் ரூபா 1500.00 கட்டணம் செலுத்தி தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். பதிவுகள் மேற்கொள்ள வரும் சிவாச்சாரியார்கள் தங்களுக்கான சிவாச்சாரியார்களுக்குரிய அடையாள அட்டை அல்லது உறுதிப்படுத்தும் ஆவணம் சமர்ப்பிப்பது கட்டாயமானது. மேலும் எம்மிடம் பதிவுகள் மேற்கொள்ளாத சிவாச்சாரியார்கள் ஆடி அமாவாசை தினத்தன்று கீரிமலை புனித் பிரதேசத்தில் பிதிர்கடன் கிரியைகள் மேற்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

**க.சுதர்ஜன், செயலாளர்.**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி).**

23.07.2024 (நி-840)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை வசதிகளின்றி தவிக்கும் மக்கள்

(கண்டாவளை)

**கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட அக்கராயன் 50 வீட்டுத்திட்டம் மற்றும் இம்மாஸ் நகர்ப் பகுதி மக்கள் குடிநீர் மற்றும் அடிப்படை வசதிகளின்மையால் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.**



கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அக்கராயன் பிரதேசத்தில் சுமார் 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன

இந்நிலையில் குறித்த பிரதேசத்தில் சுத்தமான குடிநீர் பெற்றுக் கொள்வதிலும் அதனை விட ஏனைய அடிப்படை வசதிகளை பெற்றுக் கொள்வதிலும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மேலும் சில குடும்பங்களுக்கு இதுவரை மின்சார வசதி எதனையும் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறான நிலையில் இந்த மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரமான ஒரு தீர்வை பெற்றுத்தர உரிய தரப்பினர்கள் முன்வர வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இங்குள்ள மக்கள் சுமார் 4 கிலோமீட்டர் தூரத்துக்கு அப்பால் அமைந்துள்ள ஆனைவிழுந்தான் இராணுவ முகாமுக்கு சென்று தமக்கான சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6-315)

# வார நாட்கள் முழுவதும் வெளிநோயாளர் பிரிவு இயங்கும்

## வன்னேரிக்குள ஆரம்ப மருத்துவ பிரிவு அறிவிப்பு

(அக்கராயன்)

வன்னேரிக்குளம் ஆரம்ப மருத்துவ பராமரிப்புப் பிரிவில் இதுவரை காலமும் திங்கள், புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் காலையில் இடம்பெற்று வந்த வெளி நோயாளர் பிரிவிற்கான சிகிச்சைகள் நேற்று முதல் வார நாட்களான திங்கள் முதல் வெள்ளிக் கிழமை வரை தினமும் காலையில் இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வன்னேரிக்குள ஆரம்ப வைத்தியசாலையின் அறிவித்தல் பலகையில் பிரசன்னப்படுத்தப்பட்டுள்ளது.

வன்னேரிக்குளம் ஆரம்ப மருத்துவ பராமரிப்புப் பிரிவில் கிழமையில் ஒன்று அல்லது இரு தினங்கள் நோயாளர்களுக்கான குருதி மாதிரிகள் அக்கராயன் பிரதேச வைத்தியசாலை தாதிய உத்தியோகத்தர்களால் சேகரிக்கப்பட்டு அக்கராயன் பிரதேச வைத்தியசாலையின் மருத்துவ ஆய்வு கூடத்தில் பரிசோதனை செய்யப்படவும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளகப் பயற்சியை நிறைவு செய்த மருத்துவ உத்தியோகத்தரொருவர் அக்கராயன் பிரதேச வைத்திய அணியினருடன் இணைக்கப்பட்டுள்ள நிலையில் இந்த வெளிநோயாளர் பிரிவு சேவைகள் விஸ்தரிக்கப்படுகின்றது.

முன்னதாக அக்கராயன் பிரதேச வைத்தியசாலை, உருத்திரபுரம் பிரதேச வைத்தியசாலை, வன்னேரிக்குளம் ஆரம்ப மருத்துவ பராமரிப்புப் பிரிவு ஆகியவற்றின் மூன்று மருத்துவ உத்தியோகத்தர்கள் இணைந்து அக்கராயன் பிரதேச வைத்தியசாலையில் 24 மணி நேர சேவையையும் வன்னேரிக்குளம் ஆரம்ப மருத்துவ பராமரிப்புப் பிரிவில் கிழமையில் மூன்று தினங்கள் காலையில் வெளிநோயாளர் பிரிவையும் இயக்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-350)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் ஆலய மகோற்சவம் நாளை முற்பகல் 10 மணிக்கு கொடி யேற் றத் துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 நாட்கள் உற் சவங்கள் இடம் பெறவுள்ளன.

ஏதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 6 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு தேர்த்திருவிழாவும், 7 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு தீர்த்த உற்சவமும் இடம் பெற வுள்ளது என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (நி-6)

# பூநகரி வைத்தியசாலையில் வளப்பற்றாக்குறை நெருக்கடி

(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி பிரதேச வைத்தியசாலை தொடர்ந்தும் வளப் பற்றாக்குறைகளுடன். இயங்கி வருவதனால் நோயாளர்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்குவதாக தெரிவித்துள்ளனர்.

வைத்தியசாலைக்கான வெளிநோயாளர் பிரிவில் குடிநீர் வசதி, ஊழியர்கள் பற்றாக்குறை மற்றும் வெளிநோயாளர்களின் வாகனங்களை நிறுத்துவதற்கான தரிப்பிட வசதிகளும் இல்லாத நிலை காணப்படுகின்றது. இவற்றை நிவர்த்தி செய்து தருமாறு நோயாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-6-315)


# Invitation For Bids (IFB)

## KARACHCHI PRADESHIYA SABHA, KILINOCHCHI DISTRICT

1. The Chairman, Divisional Procurement Committee (Div PC) on behalf of the Karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi invites sealed bids from eligible and qualified bidders for the works listed in the table below.
2. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the specialty of **Highway Construction & Building Construction** for grade mentioned in the table below with the construction Industry Development Authority (CIDA )
3. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB).**
4. Interested bidders may obtain further information from **The Chairman, Procurement Committee , karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi (T.P No : 021 228 5761, Fax No : 021 228 5690)** and inspect the bidding documents at the address given below **from 23.07.2024 until 06.08. 2024 During 9.00 am to 2.00 pm** on Normal Working Days.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to **The Chairman, Procurement Committee, karachchi Pradeshiya Sabha, A9 Road, Kilinochchi, from 23.07.2024 until 06.08.2024 from 9.00 am to 2.00 pm.** Upon payment of a non-refundable fee as mention below table. The method of payment will be **by cash.**
6. Bids shall be delivered in duplicate to the address to **The Chairman, Procurement Committee** ( Div PC) **Karachchi Pradeshiya sabha, A9 Road, Kilinochchi** on or before **2.00 pm on 06th August 2024** Late bids will be rejected. Bids will be opened at above place soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
7. All bids shall be accompanied by a "Bid-Security, as in the table below.
8. The pre-bid meeting will be held on **30.07.2024** at **10.00 am** at the **Karachchi Pradeshiya Sabha,A9 Road, Kilinochchi.**

| S.No | BID No. | Name of the Work | Estimated Cost (With Out VAT) (Rs.Mn) | Required Bid Security | | ICTAD Grade Required (Highways) | Bid Shall be Valid up to | Contract period | Non Refundable fee |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | Amount (Rs.) | Validity Period | | | | |
| 1 | NP/KN/KPS/2024/ PU-02 /C.W 04 | • Improvement of Ramanathapuram Anna Sport club to vetripathai Community centre, Alagapuri vidyalaya front road until Nagarasa Shop gravel road,<br>• Improvement of Vaddakachchi Civic Centre to Ten Housing Scheme Junction gravel road,<br>• * Thiruaiyaru Cemetery gravel road. | 4.3 | 45,000.00 | 05.11.2024 | C 8 Or C 7 | 08.10.2024 | 3Months | 3500.00 |
| 2 | NP/KN/KPS/2024/ PU-03/C.W 01 | Renovation & Improvement Works for Slaughter House at Korakkankaddu. | 2.6 | 25,000.00 | 05.11.2024 | C 8 Or C 7 | 08.10.2024 | 3Months | 3500.00 |

**Table-**

The address referred to above is (are):

**Chairman,**
Divisional Procurement Committee (DivPC )
Karachchi Pradeshiya Sabha.

(C-834)

23.07.2024



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 539





அந்தக் குரல் மறைந்த பிறகு, "அத்தான் நல்ல சமயத்தில் வந்து சேர்ந்தாய்! நீ எப்படி இங்கு வந்தாய்? எதற்காக?" என்று பூங்குழலி கேட்டாள்.

"பாதாளச் சிறை அனுபவத்துக்குப் பிறகு தஞ்சாவூரில் இருக்க எனக்குப் பிடிக்கவில்லை. அடிக்கடி பழுவூர் வீரர்களும் ஒற்றர்களும் வந்து தொல்லை கொடுத்து கொண்டிருந்தார்கள். ஆகையால் பழையாறைக்குப் போனேன். குந்தவைதேவி என்னை இவ்விடம் அனுப்பினார். இளவரசருக்கு அபாயம் அதிகமாயிருப்பதாகவும் ஆகையால் அவரை நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரத்தில் கொண்டு சேர்த்து விட்டு வரும்படியும் வந்தியத்தேவனிடம் சொல்லும்படி கூறினார். எனக்கும் உன்னைப் பார்த்து உன் பாட்டைக் கேட்க வேண்டும் என்று ஆசையாயிருந்தது."

"பாட்டுக் கேட்பதற்கு நல்ல சமயம் பார்த்தாய்! இளைய பிராட்டி கூறியது உண்மைதான். இளவரசருக்கு ஏற்பட்டிருக்கும் கண்டங்கள் இப்படி அப்படியல்ல. பகைவர்களின் சூழ்ச்சிகளோடு குளிர் காய்ச்சல் வந்து விட்டது."

"ஆமாம், நானுந்தான் பார்த்தேன். நாங்கள் இரண்டு பேருமாக அவரைத் தூக்கிக் கொண்டு போய் மறைந்த மண்டபத்தில் சேர்த்தோம். அதற்கு ரொம்பக் கஷ்டப்பட்டுப் போனோம். பூங்குழலி! நாகைப்பட்டினம் சூடாமணி விஹாரத்துக்குப் புத்த பிக்குகள் வைத்திய சாஸ்திரம் நன்கு அறிந்த வர்கள். இளவரசரைக் குணப்படுத்திவிடுவார்கள்."

"நாகைப்பட்டினத்துக்கு எப்படிக் கொண்டு போய்ச் சேர்ப்பது?" "கால்வாய் வழியாகத்தான்!"

"கால்வாய் வழியாக எப்படிப் போவது? படகைத் தொலைத்து விட்டீர்களே?"

"படகு தண்ணீரில் முழுகித்தானே இருக்கிறது? திரும்ப எடுத்து விட்டால் போகிறது!"

"அப்படியானால் இன்று இராத்திரியே கிளம்பிவிட வேண்டியதுதான். அந்தச் சிறிய படகில் நாம் எல்லோரும் போக முடியாதே!"

"வேண்டியதில்லை, பூங்குழலி! அதெல்லாம் நாங்கள் பேசி முடிவு செய்துவிட்டோம். வல்லவரையன் இங்கிருந்து நேரே பழையாறைக்குப் போவான். நானும் நீயும் இளவரசரைப் படகில் ஏற்றி நாகைப்பட்டினம் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டியது."

பூங்குழலிக்குப் புல்லரித்தது. மீண்டும் இளவரசருடன் பிரயாணம்! கால்வாயில், படகில் நாகைப்பட்டினம் வரையில்! வழியில் அபாயம் ஒன்றும் ஏற்படாமல் இருக்கவேண்டும்.

இருவரும் மறைந்த மண்டபத்தை அடைந்தார்கள். மண்டபத்தை நெருங்கியதும் சேந்தன் அமுதன் பலமாகக் கையைத் தட்டினான்.

"யார் அங்கே?" என்று வந்தியத்தேவனுடைய கடுமையான குரல் கேட்டது.

"நான்தான் சேந்தன்!"

"இன்னும் யார்?"

"என் மாமன் மகள்!"

வந்தியத்தேவன் மண்டபத்தின் வாசலில் வந்து எட்டிப் பார்த்தான். "வேறு யாரும் இல்லையே?"

"இல்லை, ஏன் சந்தேகம்?"

"மெல்லப் பேசுங்கள் இளவரசர் தூங்குகிறார். கொஞ்ச நேரத்துக்கு முன்னால் இங்கே யாரோ ஒருவன் வந்தான். நீதானாக்கும் என்று நினைத்து வெளியில் வந்தேன். நீ இல்லை. மந்திரவாதியைப் போல் தோன்றியது."


"அப்புறம்?"

"அச்சமயம் உன் பாட்டின் குரல் கிளம்பியது. பாடுவதற்கு நல்ல நேரம் பார்த்தாய் என்று எண்ணிக் கொண்டேன். நல்ல வேளையாக அதை மந்திரவாதியும் கேட்டுவிட்டுத் திரும்பிப் போனான். அவனை நீங்கள் பார்த்தீர்கள்?" (தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## சிங்கத்தை ஓடவிட்ட குரங்கு



சிங்கம் மரத்தடியில் நின்றபடியே, "குரங்கே, எப்படியும் கீழே இறங்கி வரத்தானே செய்வாய். அப்போது உன்னை என்ன செய்கிறேன் பார்" என்று கர்ஜித்தது.

"என்னை மன்னிக்க வேண்டும் ராஜா. உங்கள் காலில் சுளுக்கு ஏற்பட்டு ஒரு வாரமாகக் குகைக்குள்ளேயே படுத்துக் கிடந்தீங்க. இப்ப என்னைத் துரத்திய படியே எவ்வளவு தூரம் ஓடி வந்திருக்கிறீங்க! உங்கள் காலிலுள்ள சுளுக்குக் குணமாகிவிட்டது என்று நினைக்கிறேன்.

அதுக்காகத்தான் உங்களை இப்படி வம்பிழுத்தேன்" என்று பணிவாகச் சொன்னது குரங்கு.

குரங்கு சொன்னதில் சிங்கத்துக்கு நம்பிக்கை இல்லை. சில நிமிடங்களுக்குப் பிறகு தன் காலை உதறிப் பார்த்தது. சுளுக்கு நீங்கியிருந்தது. வலி இல்லை.

'ஆமாம்! சுளுக்கு நீங்கிவிட்டதே' என்று நினைத்த சிங்கம் குரங்கை அண்ணாந்து பார்த்தது.

"உங்களை மதிக்காமல் பேசியதற்காக என்னை மன்னித்து விடுங்கள். நீங்கள் எழுந்து நடமாட முடியாமல் படுத்துக் கிடந்தது வருத்தமாக இருந்தது. உங்களை நடக்க வைக்கவே இப்படி ஒரு திட்டம் போட்டேன். அது நன்றாக வேலை செய்துவிட்டது. இனி நீங்கள் முன்பு போல் கம்பீரமாக நடந்து செல்லலாம்" என்றது குரங்கு.

குரங்கின் நல்ல மனதைப் புரிந்து கொண்ட சிங்கம், "நீ எந்தத் தவறும் செய்யவில்லை. உண்மையைப் புரிந்து கொண்டேன். உன் மீது கோபம் இல்லை.

உனக்கு நன்றி தான் சொல்லணும். ஒரு கூடை கொய்யாப் பழங்களை அனுப்பி வைக்கிறேன். என் அன்பை ஏற்றுக் கொள்" என்று கூறிவிட்டுச் சென்றது.

குரங்குக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுதியான திட எண்ணங்களே நிச்சயமற்ற சூழல் நம்மை வழி நடத்திச் செல்லும் ஒளியாகும்.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மூலஸ்தானப் பிரவேச புரட்சி வெடிக்கட்டும்

ஆலயப் பிரவேசம் என்ற விடயம் அனைவரும் அறிந்ததே. சாதியத்தின் பேரால் ஆலயத்துக்குள் செல்வதற்கான அனுமதி மறுக்கப்பட்ட அநீதி உடைத்தெறியப்பட்டு ஆலயப் பிரவேசம் நடந்தது.

அதன்மூலம் எங்கள் மண்ணில் இருந்த வக்கிரத்தனம் ஓரளவுக்கு வலுக்குறைக்கப்பட்டது எனலாம்.

இருந்தும் இன்னமும் சில வரையறைகளை சைவாலயங்கள் கடைப்பிடித்து வருவதனால், ஆலயங்களில் மோசடிகளும் ஊழல்களும் நடப்பதற்கு வாய்ப்பாகிவிடுகிறது.

அண்மையில் புளியங்கூடலில் உள்ள விநாயகர் ஆலயத்தில் 62 பவுண் தங்க ஆபரணங்கள் களவாடப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

களவாடப்பட்ட நகைகள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை விரைவுபடுத்த வேண்டும் எனக் கோரி பக்தர்கள் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தியிருந்தனர்.

இந்நிலையில் விசேட பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின்போது களவாடப்பட்ட நகையில் ஒரு பகுதி மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சைவ ஆலயங்களின் நகைகள் களவு போகின்ற சம்பவங்கள் சர்வ சாதாரணமாக நடந்து வருவது மிகவும் வேதனைக்குரியது.

இறைவன் மீது கொண்ட அளவு கடந்த அன்பினால் பக்தர்கள் இறைவனுக்குக் காணிக்கையாக வழங்கிய தங்க நகைகளுக்கும் கோவில் பொருட்களுக்கும் உரிய பாதுகாப்பு செய்யப்படாமையினால், அவை களவு போகின்ற சம்பவங்கள் காலந்தோறும் நடந்தாகிறது.

இதற்கு மூலகாரணம் ஆலயத்தின் மூலஸ்தானம் வரை ஆலய பரிபாலன சபையினர் மற்றும் ஆலய தர்மகர்த்தாக்கள் செல்லாமல் இருப்பதென்பது புரிதற்குரியது.

உண்மை. ஆலயத்தின் மூலஸ்தானம் வரை ஆலய பரிபாலன சபையினர் செல்லக்கூடிய ஏற்பாடுகள் இருக்குமாயின், ஆலயத்துக்குச் சொந்தமான தங்க நகைகளை உரிய பெட்டகங்களில் பாதுகாப்பாக வைத்து எடுக்க முடியும்.

அதேநேரம் ஆலய மூலஸ்தானத்தின் கோலம் எப்படியாக இருக்கிறது என்பதையும் கண்டறிய முடியும். தேவையாயின் அந்த இடத்தைத் தூய்மைப்படுத்துகின்ற பணியிலும் இவர்கள் ஈடுபட முடியும்.

ஆம், கோடிக்கணக்கான ரூபாய் செலவில் ஆலயத்தை அமைத்துவிட்டு மூலவர் வீற்றிருக்கும் இடத்தைப் பார்க்க முடியாமல் ஆலய நிர்வாகிகள் வெளியில் நிற்பது அபத்தமானது.

எனவே ஆலய பரிபாலன சபையினர், தர்மகர்த்தாக்கள் ஆசாரசீலர்களாக இருந்து ஆலய மூலஸ்தான பிரவேசத்தை செய்தாக வேண்டும்.

இதைச் செய்யாதவிடத்து ஆலயத்தின் தங்க நகைகள் களவு போவதும் அதன் காரணமாக இடம்பெறும் கைதுகள் சைவ சமயக் குருமாருக்கு அவகௌரவத்தை ஏற்படுத்துவதாகவும் அமைவது தவிர்க்க முடியாமல் போகும்.

எனவே உடனடியாக ஆலய மூலஸ்தானப் பிரவேசத்தை ஆலய பரிபாலன சபையினர் செய்ய வேண்டும். இதில் தெய்வக்குற்றம் ஏதுமில்லை.

# கடந்த 6 மாதத்தில் ரூ.4, 981 பில்லியனை இலங்கை அரசு கடனாகச் செலுத்தியுள்ளது

## நிதி இராஜாங்க அமைச்சர்

இலங்கை அரசாங்கமானது இவ்வருடத்தின் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் ஜூன் மாதம் 30ஆம் திகதி வரையிலான ஆறு மாதக் காலப்பகுதியில் 4,981 பில்லியன் ரூபா கடனை செலுத்தியுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இது பத்திரங்கள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் மூலம் பெறப்பட்ட கடனின் பெருமதியை விட 129 பில்லியன் ரூபா அதிக கடன் தொகை எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதே காலப்பகுதியில் அரசாங்கம் பத்திரங்கள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் மூலம் மொத்தமாக 4,852 பில்லியன் ரூபா கடன் தொகையை பெற்றுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இலங்கை மத்திய வங்கியிடமிருந்து பணத்தைப் பெறாமலேயே உரிய கடன் தொகை செலுத்தப்பட்டுள்ளதாகவும், அரசாங்கத்தின் கடன் முகாமைத்துவம் பணச்சந்தையில் கடன் செலுத்தும் அபாயத்தைக் குறைத்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

இலங்கை மத்திய வங்கியில் இருந்து பணத்தை அச்சிடாமல் அரசாங்கம் கடனை அடைத்தால் நாடு ஒரு போதும் உயர் பணவீக்கத்தை நோக்கி நகராது எனவும் கடனைச் செலுத்துவதில் அரசாங்கத்திற்கு சிக்கல்கள் இல்லை எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, அரசாங்கம் பெற்றுக்கொண்ட வெளிநாட்டுக் கடன்கள் உரிய முறையில் செலுத்தப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ம-7)

இம் மாதத்தின் முதல் மூன்று வாரத்தில்

# ஒரு மில்லியனுக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை

இந்த மாதத்தின் முதல் 3 வாரங்களில் 109, 393 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட தரவுகளுக்கமைய, இந்தியாவிலிருந்தே அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

அத்துடன், இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில், 11 இலட்சத்து19, 642 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இந்தியா, ரஷ்யா, பிரித்தானியா, ஜேர்மன், சீனா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து அதிகளவிலான சுற்றுலாப்பயணிகள் வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (ம-7)

# காலியில் விபத்து பெண் உயிரிழப்பு

(காலி)

காலி, இமதுவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் இடம்பெற்ற விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக இமதுவ பொலிஸார் தெரிவித்தனர்.

காலி, நாகொடை பிரதேசத்தைச் சேர்ந்த 54 வயதுடைய பெண்ணொருவரே உயிரிழந்துள்ளார்.

முச்சக்கரவண்டி ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி அருகிலிருந்த சுவரொன்றில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின் போது முச்சக்கரவண்டி சாரதியும் பின்புறத்தில் அமர்ந்திருந்த இரண்டு பெண்களும் படுகாயமடைந்துள்ள நிலையில் இமதுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட பின்னர் பின்புறத்தில் அமர்ந்திருந்த பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த பெண்ணின் சடலம் கராப்பிட்டிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை இமதுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

# காத்தான்குடியில் கைக்குண்டு கண்டெடுப்பு

(மட்டக்களப்பு)

காத்தான்குடியில் பூநொச்சிமுனையில் குண்டு தாக்குதலுக்கு இலக்கான வீட்டுக்கு அருகில் கைக்குண்டொன்று நேற்று முன்தினம் பொலிஸாரினால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

காத்தான்குடி, பூநொச்சிமுனையில் பச்சை வீட்டுத்திட்டம் என அழைக்கப்படும் முகைதீன் ஜூம்ஹா பள்ளி வீதியில் அமைந்துள்ள வீடு ஒன்றின் முன்பாக காணப்பட்ட வடிகானுக்கு அருகிலேயே குறித்த கைக்குண்டு கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாகப் பொதுமக்கள் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதை அடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் விசேட அதிரடிப் படையின் உதவியுடன் கைக்குண்டைக் கைப்பற்றியதோடு,

இது குறித்த மேலதிக விசாரணைகளைக் காத்தான்குடிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

நீரில் மூழ்கிய நிலையில்

# தாய், இரு பிள்ளைகள் சடலங்களாக மீட்பு

(கொழும்பு)

தென்னிலங்கையில் நீரில் மூழ்கி உயிரிழந்த பெண் மற்றும் 2 சிறுவர்களின் சடலங்களை பொலிஸார் மீட்டுள்ளனர்.

திஸ்ஸமஹாராம, காவந்திஸ்ஸபுர பிரதேசத்தில் நீர் நிரம்பிய கல்குவாரியில் மூழ்கி உயிரிழந்த பெண் மற்றும் 2 சிறுவர்களின் சடலங்களை பொலிஸார் மீட்டுள்ளனர்.

32 வயதுடைய பெண் ஒருவரும் அவரது 14 மற்றும் 09 வயதுடைய இரண்டு பெண் பிள்ளைகளுமே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு குறித்த பெண்ணின் சடலம் மீட்கப்பட்டது. அத்துடன், இரு பிள்ளைகளின் சடலங்களையும் தேடும் பணிகள் தொடர்ந்த நிலையில் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மதியம் தாயும் இரண்டு பிள்ளைகளும் இந்த கல்குவாரியில் குளிப்பதற்குச் சென்றுள்ளனர்.

நீரில் மூழ்கி இந்த மரணங்கள் ஏற்பட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ம-7)


# கண்ணகியம்மன் பெரும் பொங்கல்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகை அம்மன் ஆலயத்தில் இன்று (23) செவ்வாய்க்கிழமை மாலை 3.00 மணிக்கு அம்பாளுக்கு விஷேட பொங்கல் உற்சவம் இடம்பெறவுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலில் இருந்து விலகுவதாக ஜோ பைடன் திடீர் அறிவிப்பு!



**(வோஷிங்டன்)—— ஜனாதிபதித் தேர்தலில் இருந்து விலகுவதாக தற் போதைய அமெரிக்க ஜனா திபதி ஜோ பைடன் அறி வித்துள்ளார்.**

அத்துடன், ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி வேட்பாளராக துணை ஜனா திபதி கமலா ஹாரிஸிற்கு ஜோ பைடன் ஒப்புதல் அளித்துள் ளார்.

இந்த முடிவு குறித்து தனது சமூக வலைத்தளப் பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர், ஜனாதி பதி ஆக இருந்ததே தனது வாழ்க்கையில் கிடைத்த மிகப் பெரிய கௌரவம் என்று குறிப் பிட்டுள்ளார்.

மேலும் நாட்டின் நலன் கருதி ஜனாதிபதியாக எனது கடமைகளை நிறைவேற்றுவ தில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும் என்று தான் நம்பு கிறேன் என்றும் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்

இதேவேளை கடந்த ஜூன் மாத இறுதியில் குடியரசுக் கட்சி யின் வேட்பாளர் டொனால்ட் ட்ரம் பிற்கு எதிரான விவாதத்திற்குப் பின்னர், அவர் ஜனநாயகக் கட்சி யினரின் கடும் எதிர்ப்பை எதிர் கொண்டிருந்தமையும் குறிப்

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 180 | 250 | 150-200 | 240 |
| உருளைக்கிழங்கு | 220 | 260 | 250 | 240 | 280 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 450 | 400-500 | 600 |
| தக்காளி | 450 | 450 | 450 | 350 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 160 | 180 | 120-140 | 200 |
| கோவா | 350 | 380 | 400 | 250 | 400 |
| கரட் | 400 | 500 | 480 | 350 | 500 |
| பூசணி | 200 | 240 | 230 | 150 | 280 |
| புடோல் | 180 | 250 | 180 | 200 | 200 |
| வாழைக்காய் | 250 | 250 | 250 | -- | 250 |
| சின்ன வெங்காயம் | 300 | 250 | 400 | 250-500 | 320 |
| பெரிய வெங்காயம் | 280 | 280 | 250 | 240 | 250 |
| பாகற்காய் | 800 | 700 | 600 | 800 | 600 |
| வெண்டக்காய் | 250 | 250 | 200 | 260 | 300 |
| கருணைக் கிழங்கு | 200 | 150 | 180 | 150 | 200 |
| பயற்றங்காய் | 350 | 200 | 150 | 250-350 | 300 |
| லீக்ஸ் | 550 | 540 | 550 | 350 | 600 |
| பீற்றூட் | 450 | 380 | 400 | 450 | 450 |
| கறிமிளகாய் | 800 | 800 | 850 | 400 | 1000 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 450 | 150-250 | 400 |
| போஞ்சி | 600 | 700 | 650 | 400 | 600 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 250 | -- | 180 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 60 | 60 | 80 |
| தேசிக்காய் | 600 | 600 | 600 | 500 | 700 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 130 | 90 | 60-120 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 450 | 650 | -- | 600 |
| வெங்காயப்பூ | 150 | 300 | 400 | -- | 500 |
| முள்ளங்கி | 100 | 140 | 120 | 150 | 120 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 80 | 100 | 80 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 100 | 80 |
| ஈரப்பலா | 100 | 60 | 60 | 100 | 80 |

# இன்று ஒரு தகவல் 191



தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## அருட்பெருஞ்சோதி

ஒருவர் ஒரு நாட்டிற்கு ராஜாவாகவும் இருந்து கொண்டு அதே நேரத்திலே ஞானியாகவும் இருப்பது சாத்தியமான விடயமா? அது முடியக்கூடிய காரியமா? முடியும். அதிலே சந்தேகமே வேண்டாம். ஜனக மன்னர் என்று ஒருவர் இருந்தார் .அந்த ராஜா ஞானி யாவதற்கு காரணமாக இருந்தவர் ஒரு முனிவர். அவர் தான் யாக்ஞவல்கியர். உபநிஷத் துக்கள் என்கின்ற வேதாந்த நூல்களை அருளியவர்களிலே மிகவும் முக்கியமான ஒருவர் அந்த முனிவர் .

அவர் ஜனக ராஜாவை அடிக்கடி சந்தித்து பேசிக்கொண்டிருப்பது வழக்கம். அப்போது ராஜா கேட்கின்ற நுட்பமான கேள்விகளிற்கு எல்லாம் அவர் பதில் சொல்வார். அதன் மூலம் பல உயர்ந்த வேதாந்த கருத்துக்களை இந்த உலகத்திற்கு வழங்கியிருக்கின்றார். ஒரு சமயம் இப்படி பேசிக்கொண்டிருக்கின்ற போது தான் அவர் வெளிச்சம் என்றால் என்ன என்பதற்கு விளக்கம் கொடுத்தார். அருட்பெருஞ்சோதி என்கின்றோமே அது என்ன? அது தான் அந்த தகவல்.

ஜனகரும் அந்த முனிவரும் என்ன பேசுகின்றார்கள் என்பதனை கவனித்தோம் என்றால் எங்கள் கேள்விக்கு விடை கிடைக்கும். முனிவரே வெளிச்சம் வந்தால் மனிதனுக்கு எல்லாம் விளங்குகின்றது. அந்த வெளிச்சத்திற்குரிய மூலம் எங்கே இருக்கின்றது. அது எப்படிப்பட்டது? இது தான் ஜனகருடைய கேள்வி. இதே கேள்வியை இந்த காலத்திலே ஒரு பையன் அப்பாவிடம் கேட்டான் என்றால் என்ன நடக்கும். அப்பாவிற்கு கோபம் வரும். இருந்தாலும் பையனுக்கு பதில் சொல்லாமல் விட்டால் அப்பாவிற்கு ஒன்றும் தெரியவில்லை என்று நினைத்து விடுவானோ என்பதற்காக வெளிச்சத்திற்கு மூலம் எது என்றால் அது எலர்க்ரி சிட்டி போர்டு என்று சொல்லிவிட்டு அடுத்த கேள்வி கேட்பதற்குள்ளே எழுந்து போய்விடுவார்.

ஆனால் ஜனகரும் முனிவரும் பேசுவது அதை விடப் பெரிய விடயம். ராஜாவுடைய கேள்விக்கு முனிவர் பதில் சொல்லுகின்றார். அரசே சூரியன் உதயமான உடனே எங்கும் வெளிச்சம் பரவுகின்றது. அதனுடைய உதவியாலே தான் மனிதன் தன் முன்னாலே இருப்பது என்ன என்பதை தெரிந்து கொள்கின்றான் என்றார் அவர். அதற்கு ஜனகர் சரி முனிவரே பகலிலே சூரியன் இருப்பதனாலே அந்த வெளிச்சத்தினுடைய உதவியினாலே எல்லாக் காரியமும் நடக்கின்றது.ஆனால் சூரியன் மறைந்ததற்கு பின் இரவு வேளையிலே மனிதன் எந்த ஒளியினுடைய உதவியாலே செயற்படுகின்றான் என்று கேட்டார்.

சூரியன் இல்லை என்றாலும் சந்திரன் மூலமாக கிடைக்கின்ற ஒளி இருக்கின்றதே அதனுடைய உதவியாலே மனிதன் செயற்படுகின்றான் என்றார் முனிவர். ஜனகர் விடுவதாக இல்லை . மறுபடியும் ஆரம்பித்தார். சூரியன் சந்திரன் இரண்டுமே மறைந் திருக்கின்ற காலத்திலே மனிதன் எந்த ஒளியின் உதவியாலே இயங்குகின்றான் என்று கேட்டார். சூரியன் சந்திரன் இரண்டு பேருமே இல்லாத நேரத்திலே பூமியில் உள்ள நெருப்பின் உதவியினால் வெளிச்சத்தை உண்டாக்கி மனிதன் செயற்படுகின்றான் என்றார் முனிவர்.

உடனே ஜனகர் அடுத்த கேள்வியைக் கேட்டார். சூரியன், சந்திரன், அக்கினி இல்லாத காலத்திலே மனிதனுக்கு எந்த ஒளி உதவுகின்றது என்று கேட்டார். அரசே! சூரியன், சந்திரன், அக்கினி மூன்றும் இல்லாத காலத்திலே வாக்கிலே இருந்து வெளிச்சம் உண்டாகின்றது. அதைக் கொண்டு மனிதன் இயங்குகின்றான். என்றார் அந்த முனிவர். இது எப்படி என்றால் ஒரு இருட்டான அரையிலே சில பேர் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கின்றார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். பேச்சு மூலமாக வருகின்ற கருத்து இருக்கின்றதே அந்தக் கருத்தின் ஒளியைக் கொண்டு மனித வர்க்கம் இயங்குகின்றது. அதாவது இப்போது தூல ஒளி சூக்கும ஒளியாக வளர்ந்து வழி காட்டுகின்றது. இவ்வளவு சொல்லியும் ஜனகர் விடவில்லை.

முனிவரே சூரியனுமில்லை, சந்திரனுமில்லை, அக்கினியும் வாக்குமில்லை அதாவது பேச்சுக்கு இடமில்லை. இந்த நிலைமையிலே மனிதன் இயங்குவதற்கு எந்த ஒளி உதவியாக இருக்கும் என்றார். அந்த முனிவர் இதற்கு மேலேயும் ராஜாவினுடைய அறிவு முதிர்ச்சியை சோதிக்க முடியவில்லை. உண்மையை விளக்க வேண்டிய நிலைமைக்கு வந்து விட்டார். அதாவது தூலமா சொல்வதிலேயிருந்து இன்னும் ஆழமாக போக வேண்டி வந்து விட்டது. சூக்கும பொருளையும் காரணப்பொருளையும் விளக்க வேண்டிய அவசியம் வந்து விட்டது. இப்போது நேரடியாக விடயத்திற்கு வந்து விட்டார்.

அரசே ஆன்மாவின் ஒளி உண்மையான ஒளி. அது ஒன்று தான் மனிதன் இயங்கு வதற்கு உதவியாக இருக்கின்றது. அது தான் அறிவு. மற்ற ஒளியெல்லாம் உலகத் திலே உள்ள பொருட்களை மட்டும் தான் காட்டும் அறிவை காட்டுவதற்கு அவற்றினாலே முடியாது. சூரிய ஒளி வெளிச்சத்தை வைத்துக் கொண்டு அறிவு எங்கே இருக்கின்றது என்று தேடிக்கண்டுபிடிக்க முடியுமா? கடவுளுக்கு கற்பூரம் காட்டுகின்ற பழக்கம் உண்டு. ஆனால் கற்பூரத்திலே கடவுளைக் காட்டமுடியாது.

சூரியன், சந்திரன், நெருப்பு, சொல், உயிர் ஆக இப்படி ஐந்தாவது ஒளியைத்தான் அந்த முனிவர் யாக்ஞவல்கியர் உயிர் அதாவது ஆன்மா என்றார். இந்த உயிருக்கும் உயிராக இருக்கின்ற இறைவன் தான் ஆறாவது ஒளி என்கின்றார். வடலூர் வள்ளலார் அதுதான் அருட்பெருஞ்சோதி.அருட்பெருஞ்சோதி என்கின்ற அந்த வெளிச்சத்தை புரிந்து கொள்வது சாதாரண விடயமில்லை. எங்கள் ஆட்கள் சாதாரண வெளிச்சத்தையோ சரியா புரிந்து கொண்டு நடக்கத் தெரியவில்லை. இவர்கள் எந்தக் காலத்திலே அருட்பெருஞ்சோதியைப் பற்றி புரிந்து கொள்வது.

வெளிச்சமே தேவையில்லை என்று சொல்பவர்கள் கூட இருக்கின்றார்கள். அப்படிப்பட்ட ஒருவர் இருட்டு வேளையிலே டார்ச்லைட் டை கையிலே வைத்துக் கொண்டு மெதுவாக நடந்து கொண்டிருந்தார். எதிரிலே வந்த இன்னொருவர். இந்த லைட் எதற்கு என்றார். இருட்டிலே மோதிக்கொள்ளலாமல் இருப்பதற்கு என்றார் இவர். உங்களுக்குத் தான் வெளிச்சமே தேவையில்லை என்று சொல்வீர்களே நீங்கள் எங்கே இருட்டிலே மோதப் போகின்றீர்கள் என்றார். நான் மோதப் போவதில்லை. ஆனால் எதிரிலே வருகின்றவர்கள். என்மேலே மோதிவிடுவார்கள் அதற்காக இந்த லைட் என்றார். இப்படிப்பட்டவர்கள் எல்லாம் எந்த காலத்திலே அருட்பெருஞ்சோதிக்கு வரப்போகின்றார்களோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அராலியில்...

நேற்று முன்தினம் மாலை அராலி மத்திப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது 28 வயது இளைஞன் மீதும் அவரது மோட்டார் சைக்கிள் மீதும் வாள்களாலும் இரும்புக் கம்பிகளாலும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## ஞானசார...

யில் வழங்கிய உத்தரவுக்கு அமைய கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்யபடபெந்திகே நேற்றுக் காலை இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இதேவேளை கடந்த ஜூலை 18 அன்று, மேன்முறையீட்டு நீதிமன்றம் ஞானசாரதேரருக்குப் பிணை வழங்கியிருந்தது.

குரகலப் பிரதேசத்தில் இஸ்லாம் மதத்தை அவதூறாகப் பேசிய குற்றச்சாட்டின் பேரில் ஞானசார தேரருக்கு நான்கு வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

இதன்படி, தேரரை 50,000 ரூபா பணப் பிணையிலும், தலா 500,000 ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணையிலும் விடுவிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், மேன்முறையீட்டு நீதிமன்றம் ஞானசாரதேரருக்கு வெளிநாட்டு பயணத்தடை விதித்ததுடன் இது தொடர்பில் குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு அறிவிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றத்திற்கு உத்தரவிட்டார்.

ஞானசார தேரர் குரகல பௌத்த மடாலயத்தில் கூட்டப்பட்ட 2016 ஊடக சந்திப்பின்போது, தேசிய மற்றும் மத நல்லிணக்கத்திற்கு சேதம் விளைவிக்கும் வகையில் இஸ்லாத்திற்கு எதிராக அவதூறான கருத்துக்கள் வெளியிட்டார்.

குற்றவியல் சட்டத்தின் கீழ் சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு குற்றச்சாட்டுக்களில் ஞான சாரதேரரை குற்றவாளி என நீதிபதி தீர்ப்பளித்தார்.

அதன்படி, குற்றம் சாட்டப்பட்ட வருக்கு ஒவ்வொரு குற்றப் பத்திரிகைக்கும் இரண்டு ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனையும் தலா 50,000 ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டதுடன் இரண்டு தண்டனைகளையும் தனித்தனியாக அனுபவிக்கவும் உத்தரவிட்டார்.

அபராதத் தொகையை செலுத்தத் தவறினால், ஞானசார தேரரின் சிறைத் தண்டனையை மேலும் இரண்டு வருடங்கள் நீடிக்குமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், ஞானசார தேரருக்கு எதிராக வழக்குத்தொடுத்துள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாக தீர்ப்பை வழங்கிய நீதிபதி, குறித்த அறிக்கை தற்செயலானது அல்ல, வேண்டுமென்றே செய்யப்பட்டது என்பது விசாரணையின்போது தெரியவந்துள்ளது.

இவ்வாறான அறிக்கைகள் நாட்டில் மத நல்லிணக்கத்தையும் ஒற்றுமையையும் சீர்குலைப்பதாக சுட்டிக்காட்டிய நீதிபதி, சமய நல்லிணக்கத்தைப் பேணுவதற்கு பொறுப்பேற்றுள்ள ஒரு மதத்தலைவர் என்ற ரீதியில் குற்றம் சாட்டப்பட்டவர் தனது பொறுப்பை நிறைவேற்றத் தவறிவிட்டார் என்று வலியுறுத்தினார்.

மேலும், தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்ய அனுமதியுள்ளதாக நீதிபதி ஞானசார தேரருக்கு தீர்ப்பை வழங்கும்போது தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## கரவெட்டியில்...

மேற்கொண்டனர்.

இதன்போது பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 13 பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

அவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ம-7,60)

## இணைந்து...

பயணத்தில் இணையுமாறு அழைப்பு விடுத்தார்.

'ஒன்றாக வெல்வோம் நாம் கம்பஹா' என்ற தொனிப்பொருளில் நேற்று முன்தினம் கடவத்தைப் பேருந்து நிலைய வளாகத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்நாட்டின் எதிர்காலத்தை அரசியல்வாதிகளின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக கட்டமைக்க இடமளியேன். நாட்டின் தேவைக்கேற்ப அரசியல்வாதிகள் இசைந்து செல்ல வேண்டும். இல்லாவிட்டால் நாட்டின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும்.

சிங்களவர்கள் என்று கூறிக் கொண்டு யாசகம் செய்வதில் பயனில்லை. பெருமிதம் உள்ள மனிதர்கள் என்றால் முன்னேறிச் செல்ல வேண்டும். அதற்கான மாற்றத்தை செய்வோம்.

போலி வாக்குறுதிகளை வழங்குவதில் பயனில்லை. அதனால் சஜித், அனுரவை எம்மோடு இணைந்து முன்னோக்கிச் செல்ல வருமாறு அழைக்கிறேன் என்றார். (ம-7)

## ஜனாதிபதி...

வாரங்களுக்குள் அறிவிக்க இருதரப்பினரும் இணக்கப்பாடுகளை எட்டியுள்ளனர்.

அதன் பிரகாரம் ஆளுங்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நிச்சயமாக இரண்டு வாரங்களுக்குள் அறிவிக்கப்படுவார்.

இணக்கப்பாடுகள் எட்டப்படாவிடின் பொதுஜன பெரமுன தனித்து வேட்பாளர் ஒருவரை களமிறக்க ஏற்கெனவே தீர்மானம் எடுத்து விட்டது.

வர்த்தகரும் பாராளுமன்ற உறுப்பினருமான தம்மிக்க பெரேராவை வேட்பாளராகக் களமிறக்க அக்கட்சி முடிவுகளை எட்டியுள்ளது.

இதேவேளை, ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தையில் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷவை பிரதமராக நியமிக்க வேண்டுமென்ற முக்கிய நிபந்தனை ரணில் விக்கிரமசிங்கவுக்கு விதிக்கப்பட உள்ளதாகவும் தெரியவருகிறது.

அத்துடன், இக்கலந்துரையாடலில் பொருளாதாரம் மற்றும் பொதுஜன பெரமுனவின் கொள்கை தொடர்பிலான பல விடயங்கள் தொடர்பில் இணக்கப்பாடு எட்டப்படும் என எதிர்பார்க்

# பணவீக்கம் அதிகரிப்பு

இலங்கை சனத்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் 2024 ஜூன் மாதத்திற்கான இலங்கையின் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் மாதாந்திர நுகர்வோர் பணவீக்கத்தை வெளியிட்டுள்ளது.

அதன்படி, 2024 மே மாதம் 1.6% ஆக பதிவாகிய இலங்கையின் பண வீக்கமானது 2024 ஜூன் மாதம் 2.4% ஆக அதிகரித்துள்ளது. (ம-7)

கப்படுகிறது.

எவ்வாறாயினும், கடனைச் செலுத்தி நாட்டைக் கட்டியெழுப்பக்கூடிய ஒரு தலைவரை வேட்பாளராக நியமிக்க வேண்டும் என்பதே பொதுஜன பெரமுனவின் தீர்மானமாக உள்ளதாக நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2024.07.22
சீட்டிழுப்பு இலக்கம் 5542
X 6 6 7 1 4 6
அத சம்பத
X 7 1 4 6
சீட்டிழுப்பு இலக்கம் 117
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.07.22
சீட்டிழுப்பு இலக்கம் - 1572
X 04 34 61 78 X
Double Chance 52576

மெகா பவர்
திகதி 22/07/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1890
L 04 15 36 64 72
17828

லக்கி 7 VIP
திகதி 2024.07.22
சீட்டிழுப்பு இலக்கம் 368
R 8 7 9 3 0 9 R
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3784
சீட்டிழுப்பு திகதி 22.07.2024
Q 47 48 52 64
Q 76965
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.07.22
சீட்டிழுப்பு இலக்கம் 0851
மிதுனம் 08 16 31 36 மிதுனம்
05974 10

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுப்பர் பல சம்பத
22.07.2024 வெற்றி வாரம் 250 வர்ணம் ஊதா
C 5 1 9 9 3 8
68480
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,097,584.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2516 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 22.07.2024 தினம் திங்கள்
51 58 65 67 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 100,214,402.40
DLB

சனிதா
திகதி 2024.07.22 வெற்றி வாரம் 4677
16 47 60 72 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.65,952,368.40
ரூ.100,000/- 65526
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4228 வர்ணம் மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2024.07.22 தினம் திங்கட்கிழமை
11 25 32 38
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 6,613,257.60
657001
DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
H 10 04 08 29 49
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 534,560,363.80
1692 பச்சை 22.07.2024 திங்கள்
DLB

ஜயோதா Jayoda
திகதி 2024.07.22 வெற்றி வாரம் 2044 வர்ணம் செம்மஞ்சள்
11 28 35 58 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.24,478,648.40
DLB

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
வெற்றி வாரம் : 2342
சீட்டிழுப்பு திகதி : 2024.07.22
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,511,201.60
13 31 60 71 G
623516
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கி நின்று வீட்டு வேலைகளைச் செய்வதற்கு 40 வயதிற்கு மேற்பட்டவர் தேவை. சம்பளம் 50,000 வழங்கப்படும் (1527)

**077 248 7316**

## காணி விற்பனைக்கு

ஊரெழு மேற்கில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு 2 பரப்பு, 3 பரப்பாக பிரித்து தரப்படும். ஊரெழு பலாலி றோட்டில் இருந்து 300m - 400m தூரம், நல்ல சூழல். விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம். (1526)

**077 617 2892**

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-0845)

**076 825 7716** (ஆகாஸ்)

## வங்கி மீதி வசதி (Show money)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள் (182)

**074 17 37 684**

## விற்பனை உதவியாளர் தேவை

சாறி விற்பனையில் அனுபவம் உள்ளவர்களுக்கு (ஆண்) 65000/= சம்பளம் வழங்கப்படும். (1527)

**077 202 7029**

## வீடு வாடகைக்கு உண்டு

கொக்குவில் கிழக்கு, குளப்பிட்டி லேன் காளி கோவிலடிப் பகுதியில் மேல்மாடி வீடு வாடகைக்கு உண்டு. 36 கட்டில்களுடன் கூடிய 7 அறைகள் வாடகைக்கு உண்டு.

பல்கலைக்கழக மாணவிகளுக்கு மட்டும். (C-841)

தொடர்பு:- **076 131 1219**

## அனைத்து நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள்

குறைந்த விலையில்

- Air Ticket Date Change
- Travel Insurance
- Online Visa Appoinments
- Travel Itinerary
- Sri Lanka Visa Extension
- All Country Visa Services

(C-844)

உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்

கொழும்பு| மட்டக்களப்பு |திருகோணமலை|கிளிநொச்சி புதுக்குடியிருப்பு |கொடிகாமம் |சாவகச்சேரி |புத்தூர் யாழ்ப்பாணம் |நாச்சிமார் கோவிலடி |பண்டத்தரிப்பு சுன்னாகம் |மானிப்பாய் |சங்கானை |கோப்பாய் நெல்லியடி |பருத்தித்துறை |வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 0768226240 0768226241

## வெளிநாடுகளுக்கான துரித பொதிகள்

சகல நாடுகளுக்கும் விசேட விலைக் கழிவு
11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு

| | |
|---|---|
| UK - 1300/= | French - 1990/= |
| Canada - 2400/= | Germany - 1990/= |
| Australia - 2300/= | USA - 2400/= |

மற்ற நாடுகளுக்கும் விசேட சலுகை (179)

திருமுருகன் பொதிகள் சேவை
321, K.K.S Road, Jaffna. | 208, Galle Road, colombo-6

**077 755 4528**

## J/ St James Maha Vidiyalayam, Gurunagar.
## யா/ சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம், குருநகர்.

### புதிய அனுமதி - 2025

2025 ஆம் ஆண்டுக்கான தரம் 1 வகுப்புக்கான புதிய அனுமதி விண்ணப்பப் படிவத்தினை பாடசாலை நாட்களில் காலை 8.00 மணியிலிருந்து நண்பகல் 1.30 மணிவரை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

- தரம் 1 இற்கு அனுமதி கோரும் மாணவர்கள் 01.02.2019 - 31.01.2020 இடைப்பட்ட காலப்பகுதியில் பிறந்திருக்க வேண்டும்.
- பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் பிறப்புச் சான்றுப் பத்திரமும் அலுவலகத்தில் நேரில் வந்து ஒப்படைக்கவும்.
- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசி நாள் 31.08.2024.
- தரம் 1 இற்கான நேர்முகப் பரீட்சை 25.09.2024 புதன்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகும்.

குறிப்பு :-
(தரம் 01 - 05 வரையான சகல வகுப்புக்களும் 80 Kids பழைய மாணவர்களால் உருவாக்கப்பட்ட Smart வகுப்பறைகள்.) (1529)

அதிபர்
021 222 6947

## Care Giver - பராமரிப்பாளர்

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)

CIMS College
49A, Chapel Street,Jaffna. (C-844)

College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

## V2 VISA SERVICES
## கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு (C-844)


# மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1950 - 01 - 24 | 2024 - 07 - 22 |

## சோமசுந்தரம் சபாபதிப்பிள்ளை

யாழ்.பருத்தித்துறை தம்பசிட்டி வடலித்தோட்டத்தை பிறப்பிடமாகவும், இராமநாதபுரம், கல்மடுநகர், முருகன் வீதி மற்றும் ஜெயந்திநகர் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட சோமசுந்தரம்(மாணிக்கம்) சபாபதிப்பிள்ளை அவர்கள் 22.07.2024 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் - செல்லம்மா தம்பதியினரின் அன்பு மகனும் யோகராணியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற விஜயலட்சுமி மற்றும் அர்ச்சனா(சட்டத்தரணி),அஜரகன் ஆகியோரின் அன்புத்தந்தையாரும் கஜதீபன்(பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம்)அவர்களின் அன்பு மாமனாரும் தமிழரசி, செல்வராசா,அன்னலிங்கம்,கங்காதரன்ஆகியோரின் சகோதரருமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள்(24.07.2024)நாளை புதன்கிழமை காலை 10.00 மணியளவில் இல.287,ஜெயந்திநகர், கிளிநொச்சியில் நடைபெற்று பூதவுடல் திருநகர் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்.
077 796 6415 (மகள் அர்ச்சனா)
077 749 1885 (சகோதரன் கங்காதரன்)

இல. 287, ஜெயந்தி நகர்,
கிளிநொச்சி. (c-846)

# மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20 - 12 - 1961 | 20 - 07 - 2024 |

## கனகரத்தினம் லோகநாதன்

தொட்டிலடியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் லோகநாதன் அவர்கள் 20.07.2024 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கனகரத்தினம் - பரமேஸ்வரி தம்பதியினரின் மூத்த புத்திரனும் இன்பசோதியின் அன்புக் கணவரும் ரித்திக்காவின் பாசமிகு தகப்பனாரும் இராமநாதன்(ஜேர்மன்), ரங்கநாதன் (ஜேர்மன்), நாகநாதன்(கனடா), உருத்திரமூர்த்தி வசந்தகுமாரி (கனடா), கிருபானந்தன் விஜயகுமாரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (23.07.2024) இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (1528)

தகவல் :
குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org